# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

| | | | |
|---|---|---|---|
| CC.No. | 203/2025 | LW– 1 | PW– 1 |

| | |
|---|---|
| Name | : ராஜ்குமார் (புகார்தாரர்) |
| Father's/Husband's Name | : வெள்ளையன் |
| Village | : காசம்பட்டி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 40/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of February 2026

(1 முதல் 5 எதிரிகள் ஆஜர். 6 முதல் 8 எதிரிகள் ஆஜரில்லை. மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து உணவகத்தில் வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 07.07.2025ம் தேதி இரவு 8.00 மணியளவில் வீட்டில் இருந்து மாம்பழங்களை ட்ரேயில் மந்தைக்கு எடுத்துக் கொண்டு சென்றபோது பிரகாஷ் என்பவர் செல்போனை பார்த்துக் கொண்டே வந்து என் மீது இடித்துவிட்டார். இடித்துவிட்டு எதற்காக என் மீது இடித்தாய் என்று என்னைப் பார்த்து கேட்டார். நீங்கள்தான் வந்து என் மீது இடித்தீர்கள் என்று சொல்லிக் கொண்டிருந்தபோதே எதிரி பிரகாஷ் கோத்தா, கொம்மா என்று கெட்ட வார்த்தைகளால் பேசினார். பின்னர் பிரகாஷ் அவருடன் தினேஷ், சரவணன், ரமேஷ், விஜய், கோப்பெருந்தேவி, மல்லிகா, மஞ்சுளா ஆகியோரை அழைத்து வந்து பிரகாஷ் என்பவர் ஆடு அறுக்கும் கத்தியை காட்டி ஆடை அறுப்பது போல் உன்னையும்

அறுத்துவிடுவேன் என்று மிரட்டினார். தினேஷ், சரவணன், ரமேஷ் ஆகியோர் கம்பால் என்னை உடம்பிலும், தலையிலும் அடித்தார்கள். விஜய், மஞ்சுளா, மல்லிகா, கோப்பெருந்தேவி ஆகியோரும் என்னை கம்பால் அடித்தார்கள். ஜெயப்பிரகாஷ் என்பவர் கத்தியால் எனது தலையில் வெட்டிவிட்டார். எனக்கு தலையில் ரத்தக் காயம் ஏற்பட்டது.

2) அதன்பிறகு நான் நத்தம் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்துவிட்டு நத்தம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்ந்தேன். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக என்னை மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு 3 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக் கொண்டேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் மனுவை நான்தான் கொடுத்தேன். (**அந்த புகார் மனு அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.02.12 18:35:18 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.203/2025

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 203/2025 LW- 2 PW- 2

| | | |
|---|---|---|
| Name | : | தமிழன் (கண்ணுற்ற சாட்சி) |
| Father's/Husband's Name | : | பூமிராஜ் |
| Village | : | காசம்பட்டி |
| Taluk | : | நத்தம் |
| District | : | திண்டுக்கல் |
| Age | : | 25/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of February 2026

(1 முதல் 5 எதிரிகள் ஆஜர். 6 முதல் 8 எதிரிகள் ஆஜரில்லை. மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து வத்திப்பட்டியில் ஸ்போர்ட்ஸ் கடை நடத்தி வருகிறேன். அ.சா.1 எனது சித்தப்பா ஆவார். இவ்வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 07.07.2025ம் தேதி இரவு 8.00 மணியளவில் அ.சா.1 மாம்பழங்களை மதுரை மார்க்கெட்டுக்கு கொண்டு செல்வதற்காக எங்கள் ஊர் மந்தையில் மாம்பழ ட்ரேயை எடுத்து வைத்துக் கொண்டிருந்தபோது, பிரகாஷ் என்பவர் என் சித்தப்பா மீது மோதிவிட்டு கோத்தா, தேவிடியா மகனே, என் மீது மோதுற என்று சொல்லி என் சித்தப்பாவை அடித்துவிட்டார். பின்னர் எதிரி ஜெயப்பிரகாஷ்டன் மற்ற எதிரிகள் விஜய், தினேஷ், ரமேஷ், சரவணன், மல்லிகா, கோப்பெருந்தேவி, மஞ்சுளா ஆகியோர் விறகு கட்டையை எடுத்து வந்து அ.சா.1ஐ அடித்தார்கள். 1ம் எதிரி ஜெயப்பிரகாஷ் என்பவர் ஆடு உறிக்கும் கத்தியை எடுத்து வந்து அ.சா.1ன்

உச்சந் தலையில் வெட்டிவிட்டார். அதில் அவருக்கு தலையில் ரத்தக் காயம் ஏற்பட்டது. அருகே இருந்தவர்கள் வரவும் இன்றைய தினம் தப்பித்துவிட்டாய், உன்னைக் கொல்லாமல் விடமாட்டோம் என்று சொல்லிவிட்டு எதிரிகள் அங்கிருந்து சென்றுவிட்டார்கள். எனது சித்தப்பா நத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தார். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு ஒரு வாரம் சிகிச்சையில் இருந்தார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.</u>**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.02.12 18:35:29 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.203/2025

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

| | | | |
|---|---|---|---|
| CC.No. | 203/2025 | LW- 3 | PW- 3 |

| | |
|---|---|
| Name | : வெள்ளையன் (கண்ணுற்ற சாட்சி) |
| Father's/Husband's Name | : அடைக்கன் |
| Village | : காசம்பட்டி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 60/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of February 2026

(1 முதல் 5 எதிரிகள் ஆஜர். 6 முதல் 8 எதிரிகள் ஆஜரில்லை. மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து தோட்ட வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மகன் ஆவார். இவ்வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 07.07.2025ம் தேதி இரவு 8.00 மணியளவில் நானும், எனது மகன் அ.சா.1ம் வீட்டிலிருந்து மாம்பழங்களை ட்ரேயில் எடுத்துக் கொண்டு ஊர் மந்தைக்கு வந்து மதுரை மார்க்கெட்டுக்கு கொண்டு செல்வதற்காக அடுக்கிக் கொண்டிருந்தோம். அப்பொழுது எதிரி ஜெயப்பிரகாஷ் என்பவர் என் மகன் மீது மோதிவிட்டு அவர்தான் தன் மீது மோதியதாக சொல்லி பிரச்சனை செய்து தேவிடியா மகனே, கண்டார ஓலி மகனே என்று அக்கிரமமாக பேசினார். அதன்பிறகு ஜெயப்பிரகாசுடன் சரவணன், தினேஷ், ரமேஷ், விஜய், மல்லிகா, கோப்பெருந்தேவி மற்றும் ஒரு பெண் நபர் அவர் பெயர் தற்போது ஞாபகமில்லை, அடையாளம் தெரியும் ஆகியோர் தடியல், விளக்கமாறு, கல் ஆகியவற்றால் என்

மகனை அடித்தார்கள். விலக்கிவிட சென்ற என்னை அடித்து தள்ளிவிட்டதில் எனக்கு இடுப்பில் ஊமைக் காயம் ஏற்பட்டது. தற்போதுவரை இடுப்பில் வலி உள்ளது. ஜெயப்பிரகாஷ் என்பவர் கத்தியால் என் மகன் அ.சா.1ன் தலையில் வெட்டிவிட்டார். எனது மகனுக்கு ரத்தக் காயம் ஏற்பட்டது. நத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டு அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.02.12 18:35:37 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.203/2025

## DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

| | | | |
|---|---|---|---|
| CC.No. | 203/2025 | LW- 4 | PW- 4 |

| | |
|---|---|
| Name | : பெரியகாத்தி (கண்ணுற்ற சாட்சி) |
| Father's/Husband's Name | : வெள்ளையன் |
| Village | : காசம்பட்டி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 55/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of February 2026

(1 முதல் 5 எதிரிகள் ஆஜர். 6 முதல் 8 எதிரிகள் ஆஜரில்லை. மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து மார்க்கெட் வியாபாரம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது மகன் ஆவார். இவ்வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 07.07.2025ம் தேதி இரவு 8.00 மணியளவில் எனது மகன் அ.சா.1 வீட்டிலிருந்து மாம்பழங்களை ட்ரேயில் எடுத்துக் கொண்டு ஊர் மந்தைக்கு வந்து மதுரை மார்க்கெட்டுக்கு கொண்டு செல்வதற்காக அடுக்கிக் கொண்டிருந்தார். அப்பொழுது எதிரி ஜெயப்பிரகாஷ் என்பவர் என் மகன் மீது மோதிவிட்டு அவர்தான் தன் மீது மோதியதாக சொல்லி பிரச்சனை செய்து கோத்தா, கொம்மா, தேவிடியா மகனே என்று அசிங்கமாக பேசினார். அதன்பிறகு ஜெயப்பிரகாசுடன் சரவணன், தினேஷ், ரமேஷ், விஜய், மஞ்சுளா, மல்லிகா, கோப்பெருந்தேவி ஆகியோர் என் மகனை கம்பால் அடித்தார்கள். ஜெயப்பிரகாஷ் என்பவர் கத்தியால் என் மகன் அ.சா.1ன் தலையில்

வெட்டிவிட்டார். எனது மகனுக்கு ரத்தக் காயம் ஏற்பட்டது. எதிரிகள் இன்றைக்கு நீ தப்பித்துவிட்டாய், என்னைக்கின்னாலும் கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டிவிட்டு சென்றுவிட்டார்கள். என் மகனை நத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டு அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.</u>**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.02.12 18:35:44 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்